பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**01 03 2026** **12 40**

ஞாயிற்றுக்கிழமை நண்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இரட்டை என்ஜின் அரசு மூலம் வரும் 2047ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த புதுச்சேரியை உருவாக்குவோம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. அமெரிக்க - இஸ்ரேலிய வான்வழி தாக்குதலில் ஈரான் தலைவர் அயத்துல்லா அலி கமேனி கொல்லப்பட்டதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

3. ஈரான் மீது அமெரிக்கா-இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலுக்கு ரஷ்யா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

4. மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரில் உள்ள வெடிமருந்து தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 17 பேர் உயிரிழந்தனர்.

5. உலக கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா இன்று வெஸ்ட் இண்டீஸை எதிர்கொள்கிறது.

... இனி விரிவான செய்திகள்...

<<<<>>>>

இரட்டை என்ஜின் அரசு மூலம் வரும் 2047ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த புதுச்சேரியை உருவாக்குவோம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் இன்று ஆயிரத்து 571 கோடி ரூபாய் மதிப்பிலான 74 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டிய அவர், ஆயிரத்து 142 கோடி ரூபாய் மதிப்பிலான 19 திட்டங்களையும் தொடங்கி வைத்துப் பேசினார்.

புதுச்சேரியில் ஆட்சி செய்த காங்கிரஸ் - திமுக கூட்டணியினர் அதிக அளவில் ஊழல்களில் ஈடுபட்டதால் மக்கள் பாதிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

புதுச்சேரியைக் கைப்பற்ற அந்த கூட்டணியினர் மீண்டும் முயற்சித்து வருவதாகவும் அவர் கூறினார்.

காங்கிரஸ் ஆட்சிசெய்தபோது ரேஷன் கடைகளில் அரிசி கூட மக்களுக்கு கிடைக்கவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

சென்னையில் இருந்து புதுச்சேரி - காரைக்கால் வழியாக கன்னியாகுமரி வரை தேசிய நெடுஞ்சாலை அமையும் என்று அவர் கூறினார்.

கிழக்கு கடற்கரை சாலை, ஜிஎஸ்டி சாலையை மேம்படுத்த 30 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று தெரிவித்தார்.

புதுச்சேரியில் அரசுப் பணியில் ஆயிரக்கணக்கான காலி இடங்கள் நிரப்பப்பட்டுள்ளன என்று கூறினார்.

மத்திய மாநில அரசுள் இணைந்தால் எவ்வளவு சிறப்பாக செயல்பட முடியும் என்பதற்கு புதுச்சேரியே சிறந்த உதாரணம் என்று அவர் தெரிவித்தார்.

வலிமையான இளைஞர்களே நமது வளர்ச்சிக்கு அடிப்படை என்று கூறிய அவர், வணிகம், கல்வி, ஆன்மிகம், சுற்றுலா ஆகிய துறைகளில் புதுச்சேரி வளர்ச்சியடைந்துள்ளதாக கூறினார்.

நாட்டின் உள்கட்டமைப்புதிட்டங்களை மேம்படுத்துவத்றகாக பட்ஜெட்டில் 12 லட்சட் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் புதுச்சேரி மேலும் வளர்ச்சியடையும் என்றும் அவர் தெரிவித்தார்.

புதுச்சேரி அரசின் முயற்சிகள் மக்களின் வளமான வாழ்க்கையை மேம்படுத்தி வருவதாக பிரதமர் கூறினார்.

புதுச்சேரியில் நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு அவர் மதுரை செல்றார்.

அங்கு 4 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டப் பணிகளை தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

தமிழகத்திற்கான பல்வேறு ரயில்வே திட்டங்களையும் அவர் இன்று தொடங்கி வைக்கிறார்.

குறிப்பாக அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்டுள்ள மணப்பாறை, திருவாரூர், பொள்ளாச்சி, காரைக்குடி உள்ளிட்ட 8 ரயில் நிலையங்களை இன்று அவர் தொடங்கி வைக்கிறார்.

பின்னர் மதுரை திருப்பரங்குன்றம் முருகன் கோயிலுக்குச் சென்று வழிபடுகிறார்.

அதன் பின்னர் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பாக நடைபெறும் பொதுக்கூட்ட நிகழ்ச்சியில் அவர் கலந்துகொண்டு உரையாற்றுகிறார்.

பிரதமர் மதுரை வருவதையடுத்து அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

<<<<>>>>

அமெரிக்க - இஸ்ரேலிய வான்வழி தாக்குதலில் ஈரான் தலைவர் அயத்துல்லா அலி கமேனி கொல்லப்பட்டதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கமேனியின் மரணம் ஈரானிய மக்கள் தங்கள் நாட்டை மீட்டெடுப்பதற்கான மிகப்பெரிய வாய்ப்பு என்று தமது சமூக வலைதளப் பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அயத்துல்லா அலி கமேனியின் மரணத்தை ஈரானிய அரசு தொலைக்காட்சி நிறுவனமும் உறுதிப்படுத்தியுள்ளது.

மேலும் இந்த தாக்குதலில் 200 பேர் உயிரிழந்ததாகவும், இதில் 40 ஈரானிய அதிகாரிகளும் கொல்லப்பட்டதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு பதிலடியாக மத்திய கிழக்கு நாடுகளில் ஈரான் தாக்குலை நடத்தி வருகிறது.

இதன் காரணமாக மேற்காசிய முழுவதும் பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது.

இந்நிலையில் ஈரான் தலைவர் கமேனி கொல்லப்பட்டதற்கு 40 நாட்கள் துக்கம் அனுசரிக்கப்படும் என்று அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்டுள்ள பதற்றம் குறித்து ஐ.நா. விவாதித்து வருகிறது.

ஐ.நா. பொதுச்செயலாளர் அந்தோனியோ குட்டரெஸ், ஈரான் மீதான வான்வழித் தாக்குதல்களை கண்டித்துள்ளார்.

போரின் விளிம்பில் இருநது உலகை மீட்க உடனடியாக பேச்சுவார்த்தைக்கு திரும்புமாறு சம்பந்தப்பட்ட நாடுகளைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஐ.நா.வின் சர்வதேச சட்டங்களை மீறும் விதத்தில் அமெரிக்க இஸ்ரேலிய வான்வழி தாக்குதல் நடைபெற்றுள்ளதாக திரு. குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து ஈரான் நடத்திய பதிலடி தாக்குதலையும் அவர் கண்டித்துள்ளார்.

இந்த தாக்குதல்கள், பஹ்ரைன், ஈராக், ஜோர்டான், குவைத், கத்தார், சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகங்களின் இறையாண்மையையும், ஒற்றுமையையும் குலைப்பதாக உள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

ஐ.நா.விற்கான அமெரிக்க தூதர் திரு. மைக் வால்ட்ஸ், அமெரிக்காவின் ராணுவ நடவடிக்கை சட்டப்பூர்வமானது என்றும், ஈரான் அணு ஆயுதங்களை வைத்திருக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

தங்கள் நாட்டிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையில் வான்வழி தாக்குதல் நடத்துவது அவசியம் என்று ஐ.நா.விற்கான இஸ்ரேலிய தூதர் திரு. டேனி தானோன் கூறினார்.

இந்நிலையில் இரு நாடுகளின் தாக்குதலில் நூற்றுக்கணக்கான அப்பாவி ஈரானிய பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும், பலர் காயமடைந்துள்ளதாகவும் ஐ.நா.விற்கான ஈரானிய தூதர் திரு. அமீர் சயீத் இரவானி குறிப்பிட்டார்.

இது மனிதகுலத்திற்கு எதிரான குற்றம் என்றும் அவர் தெரிவித்தார்.

ஐ.நா. சபை உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தனது 73வது பிறந்த நாளை இன்று கொண்டாடுகிறார்.

அவருக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் திரு. ஸ்டாலின் நீண்ட ஆயுளுடன் ஆரோக்கியமாக வாழ தாம் வாழ்த்துவாக குறிப்பிட்டுள்ளார்.

தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், மகிழ்ச்சியுடனும், நல்ல ஆரோக்கியத்துடனும் நீண்ட நாள் வாழ் வாழத்துவதாக கூறியுள்ளார்.

காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜூன் கார்கேயும் அவருக்கு வாழத்து தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், நீண்ட ஆயுளுடன் நல்ல உடல் நலத்துடன் வாழ வாழ்த்தியுள்ளார்.

கேரள முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் திரு. ஸ்டாலின் அவர்களின் மக்கள் நலப் பணிகள் அனைவருக்கும் உத்வேகம் அளித்து வருதாகவும், அவர் நல்ல ஆரோக்கியத்துடன் இந்தப் பணிகளை தொடர தாம் வாழ்த்துவதாக கூறியுள்ளார்.

பல மாநில முதலமைச்சர்கள் மற்றும் கட்சித்தலைவர்கள் பலர் அவருக்கு வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

<<<<>>>>

அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் மற்றும் இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாகு பொறுப்பற்ற முறையில் ஈரான் மீது மிக ஆபத்தான தாக்குதல் தொடுத்துள்ளதை ரஷ்யா வன்மையாக

கண்டிப்பதாக ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இந்த தாக்குதல் காரணமாக மத்திய கிழக்குப் பகுதியில் அமைதி சீர்குலைந்துள்ளதாகவும், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு, பொருளாதார சரிவு, கதிரியக்க அபாயம் ஆகியவற்றை அப்பகுதி எதிர்நோக்கியுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

நீதித்துறையின் மீது மக்களின் நம்பிக்கை மற்றும் மரியாதை தொடர்ந்து உயர்வதற்கு சரியான நேரத்தில் நீதி வழங்கப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. சூர்யகாந்த் தெரிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலம் திருப்பதி அருகே மாவட்ட நீதிமன்ற வளாகங்களை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழாவில் அவர் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அங்கு 120 கோடி ரூபாய் செலவில் 16 நீதிமன்ற வளாகங்கள் அமைக்கப்படுகிறது.

ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் நீதி வழங்கப்படுவது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்று குறிப்பிட்ட அவர், இதற்கு நீதிமன்ற

அமர்வு மற்றும் வழக்கறிஞர் அமைப்புகள் சேர்ந்து செயல்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் உச்சநீதிமன்ற நீதிபதிகள், திரு. நரசிம்மா, திரு. பிரசாந்த் குமார் மிஸ்ரா, திரு. **SVN Bhati** மற்றும் ஜாய் மல்யா பக்ஷி, ஆந்திர மாநில உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு. தீரஜ் சிங் தாக்கூர் மற்றும் உயரதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

<<<<>>>>

மேற்காசியாவில் நிலவி வரும் பதற்றமான சூழல் காரணமாக இந்தியாவில் தங்கியிருக்கும் வெளிநாட்டினர் தங்களது விசா காலத்தை நீட்டிக்கவும், தொடர்ந்து இங்கு தங்கியிருப்பதை முறைப்படுத்துவதற்கு வெளியுறவுத்துறை அமைச்சகம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் உள்ள வெளிநாட்டினர் தங்களுக்கு அருகில் உள்ள மண்டல பதிவு அலுவலகத்தை தொடர்பு கொண்டு தேவையான மாற்றங்களை செய்துகொள்ளலாம் என்று அறிவுறுத்தியுள்ளது.

உதவி தேவைப்படுபவர்கள் **www.boi.gov.in** என்ற இணையதள முகவரியை தொடர்புகொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரில் உள்ள **SBL** வெடிமருந்து தொழிற்சாலையில் ஏற்பட்ட மிகப்பெரிய வெடி விபத்தில் **17** பேர்

பலியாகியுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் தெரிவித்துள்ளார்.

வெடி விபத்தை தொடர்ந்து பரவிய தீப்பிழம்பால் **18**க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பலத்த காயமடைந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

தேசிய மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை படையினர் விரைந்து சென்று அங்கு மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதனிடையே உயிரிழந்த பணியாளர்களின் குடும்பத்தினருக்கு **5** லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று திரு. ஃபட்னவிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்த குடும்பத்தினருக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய தாம் பிரார்த்திருப்பதாகவும் கூறியுள்ளார்.

பிரதமரின் தேசிய நிவாரண நிதியில் இருந்து **2** லட்சம் ரூபாய் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்டும் என்றும்,

காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் பிரதமர் அறிவித்துள்ளார்.

<<<<>>>>

உலக கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா இன்று வெஸ்ட் இண்டீஸை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

-------------

குருகிராம் சர்வதேச டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் Zeel Desai - பெலாரசின் Polina Kuharenko-ஐ 6-2, 7-6 என்ற செட் கணக்கில் வென்றார்.

--------------

இந்தியா-ஆஸ்திரேலியா இடையேயான மகளிர் 3வது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா 7 விக்கெட் இழப்புக்கு 409 ரன் எடுத்துள்ளது.

**410 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடி வரும் இந்தியா சற்றுமுன் வரை --- ஓவரில் --- விக்கெட் இழப்புக்கு ---- ரன் எடுத்துள்ளது.**

**<<<<The End>>>>**